**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை**

**முன்னிலை : திரு. K. கமலநாதன், B.Sc., B.L.,**

விரைவு குற்றவியல் நீதிமன்றம், மயிலாடுதுறை.

நீதித்துறை நடுவர் எண்.1, மயிலாடுதுறை. (மு.கூ.பொ)

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆனி திங்கள் 30 ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14–ம் நாள் செவ்வாய்க் கிழமை

C.N.R.No.TNMY02-000600-2025

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.69 /2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக :– காவல் உதவி ஆய்வாளர்,<br>மணல்மேடு காவல் நிலையம்,<br>குற்ற எண். 284/2024 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | மார்கோனி, 52/24,<br>த/பெ. முனுசாமி,<br>தெற்குதெரு, மன்னிப்பள்ளம்,<br>மயிலாடுதுறை தாலுக்கா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 11.10.2024 | |
| 4 | புகார் நாள் | : | 11.10.2024 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 11.10.2024 | 25.10.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 25.11.2024 | | |
| 7 | பிரிவு 263 BNSS ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வினவப்பட்ட நாள் | : | 27.10.2025 | | |
| 8 | பிரிவு 355 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | 1) புகார்தாரர் தரப்பில் U/s 359 (ii) of BNSS ன் கீழ் 15.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, Crl.M.P.No.1412/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.<br>2) அரசு தரப்பில் U/s 348 of BNSS ன் கீழ் 07.07.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, Crl.M.P.No.1672/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | |
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 15.06.2026 | 15.06.2026 |
| | | | அ.சா.2 | 07.07.2026 | 07.07.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் வினவிய நாள் | : | 14.07.2026 | | |

இவ்வழக்கு 19.02.2025 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 14.07.2026 ஆம் தேதியான (இன்று) இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி. B. செந்தில்வடிவு அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. இராதாகிருஷ்ணன் அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்....

**// தீர்ப்புரை //**

1) இவ்வழக்கின் சாட்சி 1 ஆன வெண்ணிலா என்பவர் அப்துல் அஜிஸ் என்பவருடன் திருமணமாகி அவர்களுக்கு துர்கா என்ற மகள் இருப்பதாகவும், மேற்படி சாட்சி 1 வெண்ணிலாவின் கணவர் அப்துல் அஜிஸ் என்பவர் கடந்த 25 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டதால் சாட்சி 1 வெண்ணிலா இவ்வழக்கின் எதிரியான மார்கோணி என்பவரை இரண்டாம் தாரமாக திருமணம் செய்துகொண்டு அவர்களுக்கு மனோபாலன் என்ற மகன் உள்ளார் என்றும், மேற்படி மனோபாலனுக்கு திருமணமாகி அவரது மனைவி குழந்தைகளுடன் சென்னையில் வசித்து வருவதாகவும், இதனிடையில் இவ்வழக்கின் எதிரிக்கும், அவரது மனைவியான சாட்சி–1 க்கும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து தனித் தனியாக வசித்து வருவதாகவும், இந்நிலையில் கடந்த 11.10.2024 ம் தேதி மதியம் சுமார் 02.15 மணிக்கு சாட்சி–1 வெண்ணிலா வீட்டில் இருந்தபோது எதிரியானவர், சாட்சி–1 ன் வீட்டிற்கு வந்து சாட்சி–2 துர்கா பெயரில் உள்ள இடத்தினை தனது மகன் மனோபாலன் பெயருக்கு எழுதி வைக்க சொல்லி கேட்டு திட்டிக்கொண்டிருந்தபோது, சத்தம் கேட்டு வீட்டின் வெளியே வந்து பார்த்த சாட்சி–1 எதிரியை பார்த்து ஏன் என் வீட்டில் வந்து சத்தம் போட்டுக்கொண்டு இருக்கீங்க என்று கேட்டதாகவும், அதற்கு எதிரியானவர், சாட்சி–1 ஐ பார்த்து குச்சிக்காரி தேவடியா என்று காமகுரோதமான வார்த்தையால் திட்டி, இந்த இடத்தை தனது மகன் மனோபாலன் பெயருக்கு பட்டா மாத்தி தரமாட்டியா என்று கேட்டுள்ளார். அதற்கு சாட்சி–1 தனது மகள் துர்கா பெயரில் உள்ளதை தான் எப்படி மாற்றி எழுதிக்கொடுக்க முடியும் என்று சொன்னதும் எதிரியானவர் கையில் வைத்திருந்த உருட்டு கட்டையால் சாட்சி–1 ன் உடம்பில் மாறி மாறி அடித்ததில் சாட்சி–1 க்கு இடது கை சுண்டு விரலில் இரத்த காயமும், வலது பக்க தொடையில் உள் காயமும் ஏற்படுத்தியும், பின்னர் எதிரியானவர் கையில் வைத்திருந்த உருட்டு கட்டையை காண்பித்து என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம்புரிந்துள்ளதால் சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

3) பின்னர் எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

4) பின்னர், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

5) அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.2** வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**:-

(i) **அ.சா.1 வெண்ணிலா** தனது சாட்சியத்தில், கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு ஒருநாள் தான் வீட்டில் இருந்தபோது மதியம் 12.00 மணியளவில் தனது வீட்டிற்கு அருகில் ஒரே சத்தமாக கேட்டதாகவும், என்னவென்று வெளியில் வந்து பார்த்தபோது சுமார் 20-30 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றும், என்னவென்று தான் பார்த்தபோது அங்கு உள்ளவர்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தன் மீது தடுமாறி விழுந்ததால் தான் கீழே விழுந்ததில் தனது இடது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டதாகவும், உடம்பு கை கால்களில் காயம் ஏற்பட்டது என்றும், யார் தாக்கினார் என்பது தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரிக்கும் தங்களுக்கும் முன்விரோதம்

இருந்ததாலும், அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரி இருந்ததாலும் எதிரிதான் தன்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தபோது எதிரியின் பெயரை கொடுத்துவிட்டதாகவும், தற்போது **புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ–1 ஆன கையெழுத்து** தன்னுடையதுதான் என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்து அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

(ii) **அ.சா.2 வெங்கடேஷ்** தனது சாட்சியத்தில், தற்போது மணல்மேடு காவல் நிலையம் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு முன் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கலியபெருமாள் என்பவரை தனக்கு நன்கு தெரியும், அவர்களுடைய கையெழுத்தும் கையொப்பமும் நன்கு பரீட்சையம், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து மனு அனுமதி பெற்று அதனடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 11.10.2024 ம் தேதி மணல்மேடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவன் நிலைய பொருப்பில் இருந்த போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த வெண்ணிலா த/பெ வேலுச்சாமி என்பவரிடம் **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஐ** பெற்று, நிலையம் வந்து மணல்மேடு காவல் நிலைய குற்ற எண் 284/2024, சட்டப்பிரிவுகள் 296(b),118(1),351(3) BNS கீழ் வழக்கின் **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஐ** பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்டு உதவி ஆய்வாளர் வழக்கு கோப்புகளை எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை வேலுமணி, தினேஸ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு **பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஐ** தயார் செய்துள்ளார் என்றும், சம்பவ சாட்சிகள், கண்ணுற்ற சாட்சிகள், மகசர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முகமது ஜாபர் உலா என்பவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.7 ஆன விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று** பெற்று

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் வெண்ணிலா, துர்கா, அஞ்சுகம், கற்பகம் தலைமை காவலர் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிறகு அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 296(b),118(1),351(3) BNS ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியமளித்துள்ளார்.

7) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பில் 3 முதல் 9 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் எதிரிக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

9) **இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,** அரசு தரப்பில் சட்டப்பிரிவுகள் 296(b),118(1),351(3) BNS ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

**தீ ர் வு:-**

11) அரசு தரப்பில், கடந்த 11.10.2024 ம் தேதி மதியம் சுமார் 02.15 மணிக்கு எதிரியானவர், அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கையில் வைத்திருந்த உருட்டு கட்டையால் அ.சா.1 ன் உடம்பில் மாறி மாறி அடித்ததில் அ.சா.1 க்கு இடது கை

சுண்டு விரலில் இரத்த காயத்தையும், வலது பக்க தொடையில் உள்காயத்தை ஏற்படுத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்பட்டுள்ள நிலையில் அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு ஒருநாள் தான் வீட்டில் இருந்தபோது மதியம் 12.00 மணியளவில் தனது வீட்டிற்கு அருகில் ஒரே சத்தமாக கேட்டதாகவும், என்னவென்று வெளியில் வந்து பார்த்தபோது சுமார் 20–30 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றும், என்னவென்று தான் பார்த்தபோது அங்கு உள்ளவர்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தன் மீது தடுமாறி விழுந்ததால் தான் கீழே விழுந்ததில் தனது இடது சுண்டு விரலில் காயம் ஏற்பட்டதாகவும், உடம்பு கை கால்களில் காயம் ஏற்பட்டது என்றும், யார் தாக்கினார் என்பது தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரிக்கும் தங்களுக்கும் முன்விரோதம் இருந்ததாலும், அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரி இருந்ததாலும் எதிரிதான் தன்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தபோது எதிரியின் பெயரை கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 அரசு தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரியோடு சமாதானம் ஆகி **சமாதான மனுவில் அ.சா.ஆ.2 ஆன கையொப்பத்தை** செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

12) இந்நிலையில், நமது மாண்பமை உச்சநீதிமன்றம் குற்ற வழக்குகளில் தரப்பினர்கள் தங்களுக்குள் சமாதானம் செய்து கொண்ட நிலையில் அந்த குற்றத்தின் தன்மை பொது நலனை பாதிக்காத வகையில் இருந்தால் நீதிமன்றங்கள் அந்த சமரசத்தை ஏற்றுக்கொள்ளலாம் என தீர்வு கண்டுள்ளது. Dr.Arvind Barsaul Etc Vs State of Madhya Pradesh Another என்ற வழக்கில் " We have heard learned Counsel for parties at length. The parties have compromised and the comptaint Smt. Sadhna Madnawat categorically submitted that she does not want to prosecute the appellants. Even otherwise also, in the peculiar facts and circumstances of the case and in the interest of justice, in our option, continuation of criminal proceeding would be an abuse of the process of law/ We , in exercise of our power under Article 142 of the Constitution, deem it proper to quash the criminal proceedings pending against

the appellants emanating from the FIR lodged under section 498–A IPC. The appeal is accordingly disposed of " என தீர்வு கண்டுள்ளது. எனவே, இதிலிருந்து தரப்பினர்கள் சமரசம் செய்துகொண்டால் அந்த குற்றத்தின் தன்மையானது பொது நலனை பாதிக்காத வகையில் இருக்கும்போது நீதிமன்றங்கள் அதை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவாக தெரிகிறது.

13) எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) எனவே, மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் முக்கிய சாட்சியான அ.சா.1 சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **குற்றவாளி இல்லை** என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 271(1) BNSS –ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16) எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

17) அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) K.கமலநாதன்
நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை. (மு.கூ.பொ)

**அட்டவணை**

**அரசு தரப்பு சாட்சிகள்: –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. வெண்ணிலா | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.வெங்கடேஷ் | உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்: –**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2/அ.சா.1 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3/அ.சா.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4/அ.சா.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.2 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6/அ.சா.2 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7/அ.சா.2 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

**அரசு தரப்பு சான்று பொருள் : –** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :** இல்லை

**குறிப்பு:–**

1. எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.

3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்** :-

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(ஒப்பம்) K.கமலநாதன்
நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை. (மு.கூ.பொ)
// உண்மை நகல் //